**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.7**

**தேதி: 17.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | உடையனசாமி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | கோவிந்தன் | **தொழில்:** | சத்துணவு அமைப்பாளர் |
| **கிராமம்:** | வேலூர் | **சமயம்:** | இந்து |
| **தாலுகா:** | மானாமதுரை | **வயது:** | 61/2023 |

(எதிரி ஆஜர் இல்லை, எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் மானாமதுரை சிப்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு 3 குழந்தைகள். எனக்கு சொந்த ஊர் வேலூர். வழக்கு சம்பவ சமயத்தில் நான் வேலூர் கிராமத்தில் குடியிருந்து வந்தேன். எதிரி பாண்டிதுரையை எனக்கு தெரியும். எதிரி பாண்டிதுரையும் வேலூரில் குடியிருந்து வந்தார். பாண்டிதுரையின் மாமனார் வீடும் வேலூரில் தான் உள்ளது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்தில் ஆறுமுகம், தனபாக்கியம், ராஜேஸ்வரி ஆகிய மூவர் கொலையுண்டதாக நான் அறிந்து கொண்டேன்.கொலையாளி பற்றி எனக்கு தெரியாது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் சம்பவத்திற்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு எதிரி பாண்டிதுரை எங்கள் ஊரைச் சேர்ந்த சம்பவத்தில் இறந்து போன ராஜேஸ்வரியை 2வதாக திருமணம் செய்து கொண்டார் என்றும் அவர்களுக்கு தென்பாண்டி என்று பெயருடைய ஐந்து மாத ஆண் குழந்தை இருந்தது என்றும் திருமணம் ஆனதிலிருந்து எதிரி பாண்டிதுரை வேலைக்கு செல்லாமல் குடித்துவிட்டு மனைவி ராஜேஸ்வரியுடன் தகராறு செய்து வந்தார் என்றும் அதனால் ராஜேஸ்வரி மானாமதுரையில் உள்ள மகளிர் காவல் நிலையத்தில்

6 மாதங்களுக்கு முன்பாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்தார்கள் என்றும் நான் சொன்னேனா என்றால் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் இறந்து போன ராஜேஸ்வரி மகளிர் காவல் நிலையத்தில் எதிரி மீது புகார் கொடுத்து வழக்குப் பதிவு செய்யப்பட்டதால் சம்பவத்திற்கு 4 மாதங்களுக்கு முன்பாகவே ராஜேஸ்வரி தனது தகப்பனார் வீட்டில் இருந்து வந்ததாகவும் 06.01.2015ம் தேதி இரவு நான் வயலுக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்த போது எனது மனைவி முத்துராக்குவும் எனது மகன் மாயழகுவும் வெளியே பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும் கொஞ்ச நேரம் கழித்து சுமார் 08.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது வெளியே அலறல் சத்தம் கேட்டது என்றும் நான் வெளியே வந்து பார்த்த போது இருளப்பன் குடியிருக்கும் வீட்டு வாசல் முன்பு எனது மனைவி முத்துராக்கு, எனது மகன் மாயழகு மற்றும் வேலூரைச் சேர்ந்த வீராச்சாமீ, குஞ்சரம் ஆகியோர்கள் அலறிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் அருகில் இரண்டு பெண்கள் வெட்டப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள் என்றும் நான் சொன்னேனா என்றால் இல்லை. இருளப்பன் என்பவர் வீடு எனது வீட்டிலிருந்து 200 அடி தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது மனைவி பெயர் முத்துராக்கு என்பதும் எனது மகன் பெயர் மாயழகு என்பதும் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் இருளப்பன் வீட்டு வாசல் படியில் வைத்து இருளப்பன் அம்மா ஆறுமுகம் என்பவரை இருளப்பன் மருமகன் எதிரி பாண்டிதுரை அருவாளால் வெட்டிவிட்டு என் மனைவி மகனுடன் நின்று கொண்டிருந்த வீராச்சாமி மற்றும் குஞ்சரத்தை பார்த்து அருவாளைக் காட்டி மிரட்டிவிட்டு எதிரி பாண்டிதுரை அவன் குழந்தையை தூக்கிச் சென்றான் என்றும் நான் பதறிக் கொண்டு அங்கு சென்று அங்கு நின்ற என் மனைவியிடம் விசாரித்த போது எனது மனைவியும் எனது மகன் மாயழகுவும் வேலூரைச் சேர்ந்த

முனியாண்டி மகன் வீராச்சாமியும், கோவிந்தன் மனைவி குஞ்சரம் ஆகிய நான்கு பேர்களும் தனபாக்கியம் குடியிருக்கும் வீட்டிற்கு சென்றதாகவும் அப்போது அங்கு வீட்டின் முன் நின்று கொண்டிருந்த ராஜேஸ்வரி தன் குழந்தையுடன் நின்று கொண்டிருந்ததாகவும் அங்கு அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த பாண்டிதுரை வண்டியை நிறுத்திவிட்டு வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த ராஜேஸ்வரியிடம் குழந்தையை கேட்டு தகராறு செய்ததாகவும் நான் சொன்னேனா என்றால் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் ராஜேஸ்வரி தனது எதிரி பாண்டிதுரையிடம் தர மறுத்ததாகவும் பாண்டிதுரை தனது முதுகு பக்கம் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து தனது மனைவி ராஜேஸ்வரியை மாறி மாறி வெட்டியதாகவும் அதை தடுக்க வந்த தனபாக்கியத்தையும் மாறி மாறி வெட்டியதாகவும் இதனை பார்த்து வீட்டிலிருந்து வெளியே ஓடி வந்த இருளப்பன் தாயாரும் தனபாக்கியத்தின் மாமியாரும் ஆன ஆறுமுகத்தையும் எதிரி பாண்டிதுரை அருவாளால் மாறி மாறி வெட்டியதாகவும் அப்போது அந்த அங்கிருந்த நால்வரும் பாண்டிதுரையை பிடிக்க முயன்ற போது பாண்டிதுரை தன் கையிலிருந்த அருவாளுடன் என்னை யாராவது தொட்டால் உங்களுக்கும் இதே கதி தான் என்று மிரட்டிவிட்டு குழந்தையுடன் கிழக்கு பக்கமாக ஓடிவிட்டதாக அவர்கள் சொல்லி நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் ராஜேஸ்வரியும் தனபாக்கியமும் வீட்டிற்கு வெளியிலும் இருளப்பன் அம்மா ஆறுமுகம் வீட்டின் வாசல் படியிலும் வெட்டுப்பட்டு இறந்து கிடந்தார்கள் என்றும் அதன் பின்பு நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க சிப்காட் காவல் நிலையத்திற்கு வீராச்சாமி என்பவர் புகார் கொடுக்க சென்றார் என்றும் நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி பாண்டிதுரை எனது ஊர்காரர். எனது சமூகத்தை சேர்ந்தவர். எனக்கு

உறவினர். எதிரி பாண்டிதுரை எனக்கு உறவினர் என்பதால் அவர் செய்த மூன்று கொலைகள் சம்பந்தமாக நான் ஏற்கனவே என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது சொன்ன உண்மைகளை மறைத்து பாண்டிதுரையை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் பிறந்ததிலிருந்தே வேலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வேலூர் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயம் மட்டும் தான் தொழில் என்றால் சரிதான். அந்த பகுதியை சேர்ந்த பெரும்பானோர் தொழில் நிமித்தம் வெளியூர் சென்று விடுவார்களா என்றால் சில பேர் தொழிலுக்காக வெளியூர் செல்வார்கள். எதிரி பாண்டிதுரை தொழில் நிமித்தமாக அடிக்கடி வெளியூர் செல்வாரா என்றால் அவர் எங்கே போகிறார் வருகிறார் என்று எனக்கு தெரியாது.